குயில்

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 15-7-58 செவ்வாய் | இசை: 7

மன்னார்குடி மாநாட்டுத் தீர்மானங்களின் கருத்து.

தமிழ்நாடு தில்லியின் தனிஅடி நாடா?
வரியின் வாயிலாய் அறுபது கோடியை
அள்ளிக் கொண்டுபோய் ஆறு கோடியை
இந்தா என்றே இங்கே கொடுக்கும்
தில்லியின் செய்கை தில்லு முல்லே!

பதினே ராண்டில் பணத்தாள் அச்சிட்டு
முப்பத் தைந்து கோடியை முடக்கிய
தில்லியின் சுரண்டல் திடுக்கிட வைத்தது

பணம்உறை நிலையம் ஆயுட் பதிவு
வாய்புகை வண்டி அஞ்சல் நிலையம்
வாணிக ஒற்றுமை நிலைய வாய்ப்பு
வகுக்கும் இவற்றின் வருமா னத்தில்
செந்தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய
சிலகோ டியையும் தில்லி விழுங்கிற்றே!

அயல்நா டுகளை அரித்து வாங்கும்
கடன்தொகை தனில்விழுக் காடு பார்த்துத்
தமிழ்நாட் டுக்குத் தருதல் வேண்டுமே
அதையும் தில்லி அமுத்திக் கொண்டது!

பலதுறை களிலும் பதினே ராண்டாய்
ஏமாற் றியபணம் எண்ணூறு கோடி.

இதனால் தமிழரின் உழைப்பும் இழப்பும்
வளர்ந்ததால் இங்கு வறுமை வளர்ந்தது.

"பிராந்தையார்" தொடர் நாடகம்
பக்கம் எட்டில்...

பிழை திருத்தம்

"இசை" 6 என்ற, சென்ற இதழ் முன்பக்கத்தில் பாட்டின் 2-வது வரியில் <u>தானே</u> என்றிருப்பது பிழை. அதைத் <u>தாளே</u> என்று திருத்திக் கொள்க.

நம்தொழி லாளரும் நடுத்தர மக்களும்
வாழ்வில் இடிந்து கண்ணீர் வடித்தனர்
பண்டை நாளில் உலகமே பார்த்து
வியக்கும் பேரர சாக விளங்கிய
தமிழ்த்திரு நாடு தில்லியின் தாளில்
அடிமை என்ற நிலையை அடைந்தது.

இந்தியா ஒருநா டென்று கூறித்
தமிழ ரைச்சிறு பான்மைய ராக்கி
உயிரை உறிஞு கின்றது தில்லி.

அடிமை விலங்கை அகற்றிநம் விடுதலைக்
கொடிநட்டு மீட்சி கொள்ள வேண்டுவது
மிகவும் தேவை யாகி விட்டது!

இத்தமிழ் நாட்டில் இந்தியைத் தில்லி
புகுத்தி மனத்தைப் புண்ணுக் கிற்றே!
தமிழுக் குரிய தக்க இடங்களை
இந்தியே விழுங்கி ஏப்ப மிட்டது!
வண்டி நிலையம் வரும்பல அஞ்சல்
அட்டை பணம்அனுப் புத்தாள் அனைத்திலும்
இந்தி புகுத்தி இடர்வி ளைத்ததே!
அயல் இந்திக்கே ஆட்சி ஏன் இங்கே?
தமிழர் நாட்டில் தமிழ்த்தாய் அடிமையா?

இந்த நிலையை இனியும் பொறோம்பொறோம்
இந்த மாநா டிவற்றை யெல்லாம்
விளக்கிக் காட்ட விரும்பு கின்றது

நம்தமிழ் நாடு நாலு கோடி
மக்களைப் பெற்று வாழு கின்றது
மற்றவை போலிம் மாத்தமிழ் நாடும்
வல்லர சாக வாழலாம் அன்றோ!

ஐ. நா. என்ற நிறுவன மதனில்
உயர்தமிழ் நாடும்ஓர் உறுப்பை அடையும்
தகுதி யடைதற்குத் தடைதான் என்ன?
அயலா ருக்குநாம் அடிமை என்பதே!
உடனடி யாக உரிமை வேண்டும்!

பணநிலை உயரவும் பழம்புகழ் உயரவும்
உயிர்நிகர் தமிழ்தான் உயர்வு கொள்ளவும்
உரிமை மக்களாய் உலகில் திகழவும்
வறுமை நீங்கி வாழ்வில் உயரவும்
இனத்தின் உரிமை இன்றி யமையாதது!

தில்லியின் பிடிப்புச் சிறிது மின்றி
உரிமைத் தமிழகம் உண்டாக்கு வதிலும்
எவ்வழி யும்நமக் கில்லை என்று
கருது கின்றது பெரிதிம் மாநாடு!

உரிமை நாட்டை உடனே அடையவும்
நமது குறிக்கோள் நாடெலாம் அறியவும்
தமிழினம் தமிழ்நாடு தமிழர் நாம் என்ற
உணர்ச்சியை வளர்க்கவும் உடனடி யாக
நற்றமிழ் நாடில்லா நாவலந் தீவின்
படத்தை எரிப்ப தென்று பாரில்இம்
முழுமா நாடு முடிவு செய்வதோடு
எல்லாத் தமிழரும் இதிற்பங்கு கொள்க
எனவும் வேண்டு கின்றதிம் மாநாடு!

படஎ ரிப்புநாள் எந்தநாள் என்பதைப்
பெரியார் குறிக்க என்று
அரியஇம் மாநா டறிவிக் கின்றதே!

—✱ ▭ ✱—

விற்பனையாளர் இல்லாத இடங்களில்...

குயில் இதழைப் பெற
விரும்புவோர்
உறுப்பினராகச் சேர்ந்துகொள்க.
விற்பனைசெய்ய விரும்புவோர்
எழுதுக.

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஆனி ௩௧.

தன்னாட்சி

தன்னாட்டைத் தான்பெறான் உலகில்
எந்நாட்டா னாயினும் இழிந்தவன் தோழி!

முன்னாட்டை ஆண்டவன்
முழுவாழ்வு வாழ்ந்தவன்
தென்னாட்டான் இந்நாளில்
தில்லிக் கடியவன்
என்னேடி தோழி
இழிவில் இழிவன்றோ!

ஒன்றே குலம் என்றான்
புகழே உயிர் என்றான்
அன்றாடம் சாகின்றான்
தில்லிக்கே ஆட்பட்டான்
நன்றோடி தோழி
நாயினும் கேடானான்!

செந்தமிழ் காத்தான்
திருக்குறளில் ஆர்வத்தான்
இந்தி சுமக்கின்றான்
தில்லிக் கிளிக்கின்றான்
இந்தாடி தோழி
இவனா தமிழ்மறவன்?

மானம் இழப்பதிலும்
மாள்வதே மேல்என்பான்
ஆன தமிழன்இந்நாள்
தில்லிக்கே ஆட்பட்டான்
பூனைக்குத் தோழி
புலியும் அடங்குவதோ!

வருந்தி அழைத்தாள்

கொஞ்சும் – கிளிக்கும்கொப் பளிக்கும்என் காது
நில – வொளிக்கும் தத் தளிக்கும்இம் மாது!

தென்றல் – தெளிக்கும் கனலைஎன் மேலே
மிகப் – புளிக்கும் இனிக்கும்பசும் பாலே
அதோ – விளிக்கும் நெருங்கிஎனைச் சாவே
நான் – களிக்க வருகஎன்ஐ யாவே!

பூத் – துளிக்கும் தேனும்படு வேம்பு
நான் – குளிக்கும் புனலும்கொடும் பாம்பு
வந்து – சுளிக்கும் முகத்தைஎன் வாழ்வே
நான் – களிக்க வருகஎன்ஐ யாவே!

தி. க. வில் சேர்ந்த திருவாளர்க்கு வாழ்த்துப்பா

தீர்த்தகிரி நல்லதம்பி சித்தனோடு சின்னகண்
சீர்த்தி இராசு நடேசனும் – ஆர்த்தகுணச்
சின்னப்பன் வெள்ளையன் சிங்கார வேல்கதிர்
தன்னேர் இராமசா மியெனும்–இன்னார்
பெரியார் பெருங்கொள்கைப் பெற்றி வியந்து
திருவார் தி.க.வினிற் சேர்ந்தார் – அரிதுசெய்த
நுண்ணறி வாளர்கள் நூறாண்டு வாழ்கவே
வண்மை புகழ்எல்லாம் வாய்ந்து.

குறிப்பு: ஆங்காங்கு உள்ள தி. க. மாவட்டத் தலைவர்கள், தம் தி. க. வில் புதிதாகச் சேர்ந்த திருவாளர்களின் பெயர்களை ஆதாரத்தோடு தெரிவித்தால் அவர்களைக் குயில் வாழ்த்துப் பாட வசதியாயிருக்கும்.

தலைமலை கண்ட தேவர்

-நாடகம்-

காட்சி க.

இடம்: பாண்டிநாட்டு நயினார்கோயிலைச் சேர்ந்த தேனூர் விடுதி.

காலம்: விடியும் வேளை.

உறுப்பினர்: தலைமலை கண்ட தேவர் என்னும் கண்ணிலாப்பாவலர். தானப்பன். அவன் மனைவி.

காட்சியின் தலைப்பு:

கை தொட்டது மனம் தொடவில்லை

நிகழ்ச்சி: தானப்பனும் மனைவியும் விடுதியில் ஒருபுறம் படுத்துறங்குகின்றனர். கண்ணில்லாத பாவலராகிய தலைமலை கண்ட தேவர், அவர்களின் அண்டையில் வந்து படுத்துறங்கினர். புரண்டு படுத்த பாவலர் கை தானப்பன் மனைவிமேல் பட்டு விட்டது.

மனைவி: (திடுக்கிட்டுக் கணவனைத்தட்டி) இங்கே பாருங்க. எவனே மேலே கையைப் போடுறன்.

தானப்பன்: டேய்! ஆர்நீ! ஏன் தொட்டே? வெட்டிபுடுவேன். தானப்பண்டா நானு!

பாவலர்: (வெண்பா)

தேனூர் விடுதியிலே சேயிழையும் நீயும்நல்
ஊனும் உயிராய் உறங்குவதை — நானறியேன்
தொட்டதென்கை தானப்பா தொட்டதில்லை நெஞ்சப்பா
வெட்டுவதென்றால் வெட்டப் பா.

தானப்பன்: ஓகோ தற்செயலா கை தொட்டுட்டுதாம்! மனம் தொடலியாமே! வருத்தப்படாதே பாட்டே பண்ணுமே எண்ணுமே பாய்ச்சுருர் பார்டி.

மனைவி: சின்ன வெளக்கா இருந்தாலும் சிமுக்கு சிமுக்குண்ணு எரியறப்போ தெரியாமையா பூடும் பக்கத்லே படுத்திருக்கிறது.

ஓவியக் கலைத்திறம்

பற்கொம்பு மென்று கரிதொட்டுப் பண்ணிய
வெயிற்சுவர்க் கடற்கரைக் கலைத்திறம்
இயற்கலைக் கடலினும் இனிதாயிற் றெனக்கே.

பாவலர்: (வெண்பா)

சின்னவிளக் குண்டென்றுய் தீர்ந்தவிந்த கண்ணென்கண்
என்ன விளக்கிடினும் ஏதறியும் — என்னிலையை
எண்ணப்பா தானப்பா நம்பவில்லை என்றால் என்
கண்ணைப்பார்த் துப்பொறப் பா.

தானப்பன்: பொறுத்துக்கிட்டேன்ஐயா பொறுத்துக்கிட்டேன்!. கண்ணிலாதவர்டி கண்ணிலாதவர்!

மனைவி: ஐயோ எரக்கமாயிருக்குது பாக்கப் பாக்க!

(இதற்குள் பாவலரைத் தேடிக்கொண்டு திண்ணத் தேவன் வந்து விடுகிறன்.)

திண்ணன்: கூத்தர் வீட்டுக்குப் போனேன். நீவிர் கூத்துமுடிந்தவுடன் கிளம்பி விட்டதாகச் சொன்னார்கள். இங்குவந்தேன். இங்கு வந்த நீர் சிறிது தொலைவில் உள்ள வீட்டுக்கே வந்துவிடுவது தானே! புறப்படுவோம்.

(இருவரும் செல்லுகிறார்கள்)

வழிநடைப் பேச்சு

திண்ணன்: கூத்து எப்படி?

பாவலர்: (வெண்பா)

வல்லான் வரைந்தவற்றில் பேர்மாற்றி ஊர்மாற்றும்
கல்லான் கலச்சோறும் கல்லேயாம் - சொல்லோ
பிழை!பாட்டில் பின்னடி முன்னடி! என்னை
அழைத்ததால் கண்விழித்தேன் அங்கு!

திண்ணன்: அவ்வளவுதானு! நீர் வீடுசேர்ந்தவுடன் ஊரார் சேர்ந்து உம்மை ஒரு கேள்வி கேட்க எண்ணியிருக்கின்றார்கள். அக்கேள்வி என்ன தெரியுமா? நீர் எதற்காக இரவில் வீடு தங்குவதில்லை? என்பதே.

இந்தக் கேள்விக்கு நீவிர் தக்கவிடை கூற வில்லையானல் தண்டனை கிடைக்கும்.

பாவலர்: குறள் வெண்பா.

கூட்டட்டும் கேட்கட்டும் குற்றமிருந் தால்என்னைச்
சாட்டட்டும் தண்டிக்கட் டும்.

(போகின்றார்கள்)

காட்சி உ.

இடம்: ஷை நயினுர் கோயிலை அடுத்த காடடர்ந்த குடி என்னும் சிற்றூரில் பாவலர் வீடு.

காலம்: காலை பத்துமணி.

உறுப்பினர்: ஊரார், பாவலர், வீட்டார்.

காட்சித் தலைப்பு:

வேண்டும், மனைக்கு விளக்கு

நிகழ்ச்சி: வீட்டினரும் ஊராரும் உட்கார்ந்திருக்கின்ருர்கள் பாவலர் நிற்கின்ருர்.

நாட்டாண்மைக்காரர்: *நீவிர் வீட்டுக்கொரு பிள்ளை. பெற்ருேர் உள்ளத்தை வாட்டுகின்றீர் எந்நேரமும் வெளியில் போய் விடுகின்றீர். இரவில் வீட்டுக்கு வருவதேயில்லை. இதற்கென்ன காரணம் கூறுகின்றீர்.*

பாவலர்: (வெண்பா)

கண்ணுமில்லை கைக்குத் துணையாய்க் கடமைசெயும்
பெண்ணுமில்லை பெற்ருேர்க்குத் தொல்லைதரும் — [எண்ணமில்லை
ஊராரோ என்இளைய உள்ளம் உணரவில்லை
யாரோடு போராடு வேன்.

நாட்: *உம் திருமணம் குறித்து நீர் யாரோடும் போராடமுடியாது நீர் ஓர் கவிஞராயினும் கள்ளரே! கள்ளர்க்கு இருக்கவேண்டிய ஒழுக்கம் கடுகளவும் உம்மிடம் இல்லை.*

முன்னெல்லாம் மன்னர் இருந்தார். இப்போது இல்லை.

படையில்லை படையாட்சி இல்லை நம்மைப் படைக்கு அழைப்பாரில்லை. நிலைமை இவ்வாறிருக்கும் தலைவர் நமக்கில்லை இருந்தால் அவரிடத்தில் நல்ல எண்ணமில்லை. கல்வி கற்க வாய்ப்பில்லை.

கழனியில்லை உழவுமில்லை உயிர்வாழ ஒருவழி தான் கண்டோம்-கையாண்டோம்.

நீவிர் இந்நாள் வரைக்கும் எத்தனை முறை எவரெவர் பொருளைப் பறித்தீர்? இல்லை! எவர் உமக்குப் பெண் தருவார்.

பாவலர்: (வெண்பா)

அன்னை யுடைமை; அழியாத் தமிழ்ச்சொற்கள்!
அன்னவற்றை அள்ளிஎன்பாட் டாக்குவேன் — [என்புகழைத்
தாண்டும் ஒருகள்ளன் எங்குள்ளான் சாற்றுவீர்
வேண்டும் மனைக்கு விளக்கு.

நாட்: *கவித்தொழில் கள்ளர் தொழிலாகாது. ஒன்பது நாள் தவணை தந்தோம் ஒரு முறையாவது தொழில் செய்து காட்டவேண்டும்.*

நம் தொழில் ஒழுக்கமற்றதாயிருக்கலாம். ஆயினும் பழக்கம் பழுதாகக்கூடாது.

(கூட்டம் முடிந்தது. அவரவர் வீடு சென்ருர்கள்.)

காட்சி ங.

இடம்: ஷையூர் ஆலின் அடி.

காலம்: முதுமாலை.

உறுப்பினர்: பாவலர் நெஞ்சு.

காட்சித் தலைப்பு;

நெஞ்சே வா

பாவலர்: (வெண்பா)

பூவடியால் மைந்தர் புலன்கலக்கும் இந்தஊர்த்
தேவடியா ளுக்களிப்பார் செல்வத்தைத்—தேவடியாள்
எட்டிஒரு பக்கம் இடுவாள் அதைப்பறிப்பேன்
கட்டிற்கீழ் நெஞ்சே கவிழ்.

(போகின்ருர்)

தொடர் 14-ஆம் பக்கம்.

மன்னார்குடியில்...

டெல்லியின் பிடரியைப் பிடித்தாட்டி ஆணவத்தை அடக்கும் வகையில்—இன்றியமையாச் சிறப்புக்களோடு சென்ற கிழமையில் மன்னார்குடியில் சுதந்திரத் தமிழ்நாடு மாநாடு நடந்திருக்கிறது. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன.

ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள்!

அவள் அச்சுப் பதுமையினும் சிறந்த அழகி அவனோ ஆணழகன், ஒரு நாள் எதிர்பாராத வகையில் இருவரும் சந்தித்தனர் அவன் அவளை விரும்பினான் அவள் உள்ளமும் அவனை நாடிற்று.

அன்று முதல் அவள் தன் தோழிகளுடன் முன்போல் கலந்து பழகுவதில்லை தனிமையை மிகுதியும் விரும்பினாள், அவளின் போக்கில் மாறுதல் கண்ட தோழிகள் ஐயுற்றனர்,

ஒரு நாள் அவள் அவனுக்காகக் காத்திருந்தாள் அவனும் அவளைக் காண ஆவலோடு வந்தான் இதனைத் தோழிகள் கண்டு விட்டனர் கண்டவர்கள் மெல்லச் செவிலியின் காதுக்கு எட்ட வைத்தனர், செவிலி தாயிடம் கூற, தாய் தன் கணவனிடம் மகிழ்ச்சியோடு கூறினாள் செய்தி கேட்டு அவனும் மகிழ்ந்தான், விரைவில் மணமுடிக்க முடிவு செய்தான்,

குறிப்பிட்ட நாளில் ஆன்றோர்கள் நிறைந்த அவையில் இருவருக்கும் சிறப்புறத் திருமணம் நடந்தேறியது. மறு நாள் அவன் எல்லோரிடமும் விடைபெற்று, அவளை அழைத்துச் செல்ல விழைந்தான், தாயோ தன் மகளுக்கு விடைகொடுத்தனுப்ப முடியாமல் திணறினாள் அவளின் அகக் கண்களுக்கு "அவள்" இன்னும் சிற்றில் கட்டி விளையாடும் பேதையாகவே காட்சியளித்தாள், இறுதியில் அவள் விடை பெற்று அவனுடன் சென்றாள்.

திருமணம் நடந்து திங்கள் பதினெட்டுக்கு மேல் இருக்கும், ஆனால் தாயோ தன் மகளை எண்ணி ஒரு கணம் கலங்குவதும் மறு கணம் மகிழ்வதுமாகக் காலங் கழித்தாள், இன்றுபோல் அன்று நினைத்த அளவில் அஞ்சலட்டை விடுத்துச் செய்தி அறியவோ தொலை பேசியின் வாயிலாகப் பேசி மகிழவோ புகைவண்டியில் புறப்பட்டுச் செல்லவோ வாய்ப்பில்லை எனவே வருத்தம் மேலிட்ட தாய், செவிலியை அழைத்துத் தன் மகள் வீட்டுக்கு அனுப்பிவைத்தாள், இளமை முதலே அன்பு பாராட்டி வளர்த்த செவிலி மகிழ்ச்சியோடு மங்கையின் வீடு நோக்கி நடந்தாள்.

மலர்த் தோட்டம். அதன் நடுவே முல்லைக் கொடிகளைப் பந்தலாகக் கொண்ட அழகிய அகலமான மேடை அதன் எதிரில் பாணரொருவர் முல்லைப்பண்ணை யாழில் இசைத்துக்கொண்டிருந்தார். "அவன்" அம்மேடையில் தன் புதல்வனை மடியிலிறுத்தி மலர்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தான். அவன் கரங்கள் அக்குழவியின் கைகளை யாழிசைக் கேற்பத் தாளம் போடச் செய்தன.

அவளோ தோழிகள் பறித்துத் தந்த மலர்களைத் தொடுத்தாள், அத்தொடுப்பில் ஒரு பகுதியை நறுக்கித் தன் புதல்வனுக்குச் சூட்டி இன்புற்றாள். மற்றொரு பகுதியைத் தன் கூந்தலில் வளைத்துச் சூட்டிக் கொண்டாள்.

மகள் வீடு சென்ற செவிலி, இக்காட்சியைக் கண்டாள்; திரும்பி வந்தாள். வந்தவள் நற்றாயிடம்:

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லறிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே.

என்று கூறினாள். இதனைக் கேட்ட தாய்க் கிழவியோ ஈன்ற போதினும் பெரிதுவந்தாள்.

— பாலு.

தச்சுக் கலைத்திறம்

அழகிய கருங்கல் பாவை என்றன்
கண்ணில் அழகெலாம் காட்டிப்
பண்ணொன்று காதிலும் பாடிய தென்னே!

அவள் அவன் நேர்ந்தாடல்

அவன்:

மந்தைமாடு வீடுவரும் மாலே நேரத்தில்
வந்துநின்ற தென்னேடி சாலே ஓரத்தில்?

அவள்:

சந்தையிலே கூடுவாங்கப் போனதி ஞலே
தயங்குகின்றேன் சாயந்தரம் ஆனதிஞலே

அவன்:

சந்தையிலே கூடுவிற்க வில்லேயா கண்ணே?
தக்கதாக இல்லேஎன்ற தொல்லேயா பெண்ணே?

அவள்:

சந்தையிலே கூடுவிற்க வில்லே நல்ஜயா
தனித்துவந்தேன் என்னபண்ண நீயே சொல்ஜயா

அவன்:

கூடு! நல்லகூடு! கோழிக்கூடு வேண்டுமா?

அவள்:

கூடு நல்லகூடு கோழிக் கூடு வேண்டுந்தான்

அவன்:

பாடு பெண்ணே! பாடுநல்ல கூடுதருவேன்

அவள்:

ஆடுகொஞ்சம் ஆடுநானும் பாடி வருவேன்

அவன்:

கூடு, கோழி கூடுவது போலக் கூடுவோம்

அவன்:

கூடு, சிட்டுக் கூடுவது போலக் கூடுவோம்

அவன்:

கூடு, கூடு கொஞ்சுமொழி சொல்லிச் சொல்லியே!

அவன்:

கூடக் கூட நெஞ்சில் ஆசை தீரவில்லேயே!

★ ★ ★

பிசிராந்தையார்

-நாடகம்-

காட்சி க.

இடம்: பாண்டிய நாட்டுத் தலைநகர் உறையூரில் இறைவர் தெருவில் பிசிராந்தையார் வீடு.

நேரம்: மாலை ஐந்து மணி.

கதை உறுப்பினர்: பிசிராந்தையார், பேரன், மேற்படியார்.

காட்சித் தலைப்பு:

யானை குப்பை வாருகின்றது

நிலைமை: பிசிராந்தையாரின் வீட்டுக் குறட்டில் யானைக்கு இட்ட கரும்பின் கட்டுகளை அது மென்றுமிழ்கின்றது. அதனால் குவிந்த கருப்பஞ்சக்கைகளை அதுவே கூட்டி அள்ளிப் பெருங் கூடையில் நிரப்பி நிரப்பித் தொலைவிற் சென்று கொட்டிவிட்டு வருகின்றது. பிசிராந்தையார் தம் கடைசிப் பேரனாகிய கோப் பெருஞ் சோழனைத் தோளில் தூக்கியபடி வெளியில் வருகின்றார் அவரைத் தொடர்ந்து புலவர் பலர் வருகின்றார்கள்.

கோப்பெருஞ்சோழன்: மண்டியிடச் சொல்லுக தாத்தா யானையை!

பிசிராந்தையார்: மண்டியிடு கோப்பெருஞ் சோழனார்க்கு!

(மண்டியிடுகின்றது. பிசிராந்தையார் பேரனை அதன்மேல் உட்கார வைக்கின்றார்)

புலவர் க: ஏறுவோர் கோப்பெருஞ்சோழனார். ஏவுவோர் ஆந்தையார். ஏனையா யானை மண்டியிடாது?

(யானை நகராது நிற்கிறது)

கோப்: என்ன தாத்தா! யானை போகமாட்டேன் என்கிறது!.

பிசிரா: நீ விழுந்துவிடக் கூடும் என்று.

கோப்: இல்லை! இல்லை! அதற்குப் பசி தாத்தா.

(இதற்குள் புலவர் ஒருவர் பிசிராந்தையாரை அணுகிப் பாடுகின்றார். பேரனும் மற்றப் புலவரும் புதுப் புலவரை நோக்குகின்றார்கள்)

புதுப்புலவர்: பாட்டு

ஈண்டிய நற்புகழ் எண்டிசை போற்றிடும்
தென்மதுரைப்
பாண்டியன் போற்றிடும் பாவலரே நான்
பசித்து வந்தேன்
வேண்டிய முத்தமிழ்ச் சோறிட்டு வாழ்வில்
விளக்கேற்றுவீர்
ஆண்டிநான்! நீஅருட் செல்வரன் றோதமிழ்
ஆண்டவரே!

(கை கூப்புகின்றார்)

பிசிரா: வேண்டிய மட்டும்!

கோப்: யானைப் பசிக்கு ...

பிசிரா: வேண்டிய மட்டும் (புதுப் புலவரை நோக்கி) இருக்கலாமே!

கோப்: யானை?

பிசிரா: போகலாமே

(யானை போகின்றது. பேரன் முகத்தை மகிழ்ச்சி தழுவுகின்றது. புதுப்புலவர் ஒருபுறம் திண்ணையில் அமர்கின்றார். அவர் உள்ளம் பூரிக்கின்றது.

புலவர் க: (புதுப்புலவரைநோக்கி) எந்த ஊர்?

புதுப்புலவர்: சோழநாடு! ஐயா உங்களை ஒன்று கேட்க எண்ணுகிறேன்.

புலவர் க: நன்றாக!

புதுப்புலவர்: (பிசிராந்தையாரைக் காட்டி) இவர்கள் பேரனுக்கு என்னபெயர்?

புலவர் க: கோப்பெருஞ்சோழன்! புனை பெயர். இயற்பெயர் முருகு. உங்கட்கு

வியப்பாயிருக்கும் கோப்பெருஞ்சோழனென்று இவர்கள் தம் பேரனுக்குப் புனைபெயர் இட்டது பற்றி.

புதுப்புலவர்: ஆம் ஐயா!

புலவர் க: சோழநாட்டு வேந்தர் கோப்பெருஞ்சோழனுர் இவர்கட்கு நெருங்கிய நண்பர்.

புதுப்புலவர்: அடிக்கடி அவரை இவர் நெருங்குவதுண்டோ?

புலவர் க: உடல் நெருக்கமில்லை உள்ளத்தின் நெருக்கந்தான்

புதுப்புலவர்: நானும் சோழவேந்தர் அவையில் இருந்தவன். ஒருமுறையாவது இவர்களை அங்குக் கண்டதில்லை.

புலவர் க: கண்டிருக்கமுடியாது. நட்பின் இலக்கணம் புணர்ச்சி பழகுதல் மட்டுமா?

புதுப்புலவர்: இல்லை! உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்.

புலவர் க: இவர்களின் உள்ளக் கோயிலில் என்றும் நிலையாக எழுந்தருளியிருப்பவர் கோப்பெருஞ் சோழரே!

பிசிரா: இதுவரைக்கும் கோப்பெருஞ் சோழரை நான் காணும் வாய்ப்புப் பெறவேயில்லை. அவரை நான் என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பதற்குக் காரணமும் அதுதான் என்று எண்ணுகிறேன்.

(அதே நேரம் மேற்படியார் என்ற புலவர்வருகின்ருர்)

பிசிரா: வருக மேற்படியாரே! என்ன வர வர மேற்படியார் கீழ்ப்படியாராகிவிட்டார். காலையில் வரும்படி சொன்னேன். கீழ்ப்படிந்தாரா?

மேற்படியார்: வரும்படி யிருந்தால்தானே வரும்படியாய் இருக்கும். என்குழந்தை சோறு கேட்டான். மனைவி இல்லை என்ருள். இரும்படி உன் நெஞ்சம் என்றேன். ஒரு பணம் தரும்படி கேட்டாள் அரிசி வாங்க. வரும்படியிருந்தால் தானே! திரும்படி உன் ஆத்தாள் வீட்டுக்கு என்றேன். பெரும்படி வருந்தினள். அங்கிருக்க முடியவில்லை. இங்கு வரும்படி நேர்ந்தது.

பிசிரா: அரிசி வாங்க ஒரு பணமா இல்லை! சிரிக்கவைத்து இன்பத்திற் சேர்க்கும் என்னை நீவீர் இப்போது அழவைத்துத் துன்பத்திற் சேர்த்தீர். முதலில் இதைக் கொண்டுபோய் மனைவி மக்களின் பசித்துன்பத்தைப் போக்கி வரவேண்டும்.

(மார்பின் கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி மேற்படியார் கையில் கொடுக்க அவர் வாங்கிக்கொள்கிருர்.)

மேற்படியார்: *(மற்ற புலவர்களைப் பார்த்து நகைத்து)* இதைக் கொண்டுபோய் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிடுகிறேன்.

புலவர் க: அப்படியானுல் பணமில்லை அரிசியில்லை என்றதெல்லாம் பச்சைப் புளுகு தானு?

மேற்படியார்: வேறென்ன?

(அனைவரும் சிரிப்புக் கடலில் மூழ்குகின்ருர்கள்)

புலவர் க: *(கரையேறி)* ஐயா *(பிசிராந்தையாரை நோக்கி)* நகைதந்து நகையைப் பறித்தார் உங்களிடமிருந்து...!

பிசிரா: நகை இழந்தது பெரிதன்று. நகைப்பைப் பெற்றேன் அது பெரிது. பெறற்கரிது! நீரே அணிந்து கொள்க மார்பணியை.

புலவர் க: பொய் சொல்லியதற்காக.

பிசிரா: இல்லை! இல்லை! அந்தப் பொய்யை நான் நம்பியதற்காக.

எல்லாரும் நல்லவர் இந்த நாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்த நாட்டில். அரிசி இல்லை என்று மேற்படியார் சொல்லியதை நான் ஏன் நம்பினேன் என்ருல், ஏழைகள் ஒரு சிலர் தோன்றமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என் உள்ளம் ஏழ்மை தோன்றிற்று நம்பிவிட்டது என் உள்ளம்.

தொடர் 12–ஆம் பக்கம்.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

திராவிடம்

இது தமிழம் என்பதன் திரிபு ஆதலின் தமிழ்ச் சொல்லே. ஆரியம் அன்று. இதுபற்றிப் பல தடவைகளில் என்னுல் எழுதப்பட்ட வெண்பாக்கள் இங்கே தரப்படுகின்றன.

பாலி மொழியிற் பகர்ந்த மகாவமிச
நூலில் ஒருசெய்தி நோக்குகின்ருேம் : - மேலாம்
தமிழ்என்ற சொல்லைத் தமிளோஎன் ருர்! ஏன் ?
தமிழரல்லார் நாக்குத் தவறு.

தமிழ்நாட்டை ஆசிரியர் தாலமி முன்னுள்
தமிரிசி என்றுரைத்தார். தாம்ழர் – தமிழரல்லர்!
ஆதலினுல் தோழா அயலார் ஒருசொல்லை
ஒதலினுல் மாறுபடல் உண்டு.

தமிழென்று சாற்றுதற்கு மச்ச புராணம்
த்ரமிளென்று சாற்றியதும் காண்க – தமிழா
படியைப் ப்ரதிஎன்னும் பச்சைவட வோரிப்
படியுரைத்தால் யார்வியப்பார் பார்

தமிளோவும் மற்றும் தமிரிசியும் வேறு
த்ரமிள த்ரமில்எல்லாம் சாற்றின் – தமிழின்
திரிபே அவைகள்! செந்தமிழ்ச்சொல் வேர்தான்
பிரிந்ததுண்டோ இங்கவற்றில் பேசு.

திரிந்ததமிழ்ச் சொல்லும் தமிழ்ச்சொல்லே ஆற்றில்
பிரிந்தவாய்க் காலும் பிரிதோ ? – தெரிந்த
பழத்தைப் பயம் பளம் என்பார் அவைகள்
தழைந்த தமிழ்ச்சொற்கள் தாம்.

உரைத்தஇவை கொண்டே உணர்க தமிழம்
திராவிடம்என் றேதிரிந்த தென்று! — திராவிடம்
ஆரியர்வாய் பட்டுத் திரிந்தாலும் அந்தச்சொல்
ஆரியச்சொல் ஆமோ அறி.

தென்குமரிப் பஃறுளியும் சேர்வடக்கு மாமலையும்
தன்எல்லை கொண்ட நடுவிடத்தில் — மன்னும்
பொருள்கள் பலவாம்! பொலிந்தனவே அந்தப்
பொருள்கள் தமிழ்ப்பெயரே பூண்டு

"திராவிடம்" தன்னந் தனியா ரியமா?
"திராவிடம்" இன்பத் தமிழின் — திரிபன்றோ!
இன்பத் தமிழகத்துக் கிட்டார் திராவிடப்பேர்
என்பார்சொல் ஏற்புடைய தன்று.

உள்ளக் குளிர்ச்சி

— ஆ: அழகன் —

மேலைத் திசைதனில் நின்றிலங் குஞ்சுடர்
வெம்மை தவிர்ந்திருந் தானவனைக்
காலை முதற் கொண்ட வெஞ்சின மாற்றிடக்
காரணம் யாதெனக் கூறுகென்றேன்
மாலை யெனு மட வோள் எனை நீங்கிய
மாத்துயர் தீய்த்திட ஆர்த்திருந்தேன்
கோல மிகுமவள் மீட்டெனைக் கூடிக்
கொடுத்த முத் தாலுள்ளங் குளிர்ந்ததென்றான்.

திராவிடம் என்னல் தமிழின் திரிபே
திராவிடம் ஆரியச்சொல் அன்று — திராவிடம்
வெல்கஎன்று சொன்னால்நம் மேன்மைத் தமிழர்கள்
வெல்கஎன்று விண்டதுவே யாம்.

வந்தார் மொழியா திராவிடம்? மாநிலத்தில்
செந்தமிழ்ச் செல்வமா அந்தச்சொல்! — முந்தியே
இங்குள்ள நற்பொருள்கள் எல்லாவற் றிற்குமே
எங்கிருந்து கொண்டுவந்தார் "பேர்."

வேட்டி

இது வேஷ்டி என்ற வட சொல்லின் சிதைவாம். இவ்வாறு பார்ப்பனரும் பார்ப்பன அடியாரும் பகர்வர்.

. வெட்டப்படுதலின் வேட்டி எனத் தூய தமிழ்க் காரணப் பெயர்.

வெட்டல் என்ற தொழிற்பெயரின் அல். இறுதிநிலை கெட வெட்டு என நின்று முதல் நீண்டது வேட்டு என. அது இ எனும் பெயர் இறுதி பெற்று வேட்டி ஆனது. அறுக்கப் படுதலின் அறுவை என்றும் துணிக்கப் படுதலின் துணி என்றும் துண்டிக்கப்படுதலின் துண்டு என்றும் வருவதும் ஒப்பு நோக்கத் தக்கதாம்

முட்டி

இது முஷ்டி என்ற வடசொற் சிதைவாம் முட்டுதல் முட்டு முட்டி என வந்தது காண்க.

ஆசாரம்

ஆசு + ஆர்வு + அம். குற்றத்தை ஆய்ந்து ஒழுகுவதோர் ஒழுக்கத்திற்குக் காரணப்பெயர். ஆர்வு என்பதில் வு தொக்கது.

பெருவாயின் முள்ளியார் அருளிச் செய்த ஒழுக்கப் பகுதியின் தொகுப்புக்கும் ஆசாரக் கோவை என்று பெயர். இத்தொடர் தமிழான தால் அப் பெயர் வைத்தார்.

அதி

இஃது அதைத்தலில் முதனிலை வேறுபட்ட தமிழ்ச்சொல் அதைத்தல், அதை, அதி, என் பனவற்றிற்கு மிகுதி என்பது பொருள்.

★

அழகு பாழாவதா?

—: அழகு சரணன் :—

காட்டில் உனக்கென்ன வேலை?—அழகே
காட்டில் உனக்கென்ன வேலை?—இரு
கண்ணோடு நானிங்கே காத்திருக்கும் போது
வண்ண மயிலென்று வழங்கும் பெயரோடு
(காட்டில்)

பாலைக்கோ நிலவு பாலைப் பொழிவது?
பாறைச் சிலைவாய்க்கோ பழத்தைப் பிழிவது?
வாலைக் குமரியுன் சாயல்பெற் ருலென்ன?
வா!இங்கே! உன்னழகை மேலும்கண்
[டாலென்ன?... (காட்டில்)

ஆட்டத்தி லேவல்ல கலையர சேபுரிந்
தாடும் பொருள்சிறக்கும் பாடல்தனைப்
[புனைந்து
பாட்டுக் குயில்பாடும் காட்டிலே நீயிருந்தால்
பார்க்கநான் இன்றியே பாழாவ தோஅழகு...?
(காட்டில்)

★

பிசிராந்தையார்...

புலவர் க: ஏழைகள் இருக்கவேண்டுமா? எதற்காக ஐயா?

பிசிரா: எல்லாரும் நல்லவர் இந்தநாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்தநாட்டில். வாழ்வில் தொல்லை இல்லையே தவிர மனமகிழ்ச்சிக்கு வழியுண்டா? மேற்படியாரின் ஒரே ஒரு பொய்தானே நமக்கு விடாநகைப்பை உண்டாக்கிற்று!

எல்லாரும் நல்லவர் இந்தநாட்டில். எல்லாரும் செல்வர்கள் இந்தநாட்டில். தீயவர் சிலர் இருக்கவேண்டும். ஏழைகள் சிலர் இருக்க வேண்டும், இல்லையானல்,

மக்கள் இயக்கம் மரப்பாவை இயக்கம்.

இதேநேரம் யானை விரைவாகத் திரும்புகின்றது. பேரன் அஞ்சித் தாத்தாவைத் தாவுகின்ருன் மழையும் காற்றும் வந்ததால் தாத்தா பேரனைத் தூக்கிக் கொண்டு உள்ளே போக மற்றவரும் உட்செல்லுகின்ருர்கள்.

—காட்சி முடிவு—

காதலியானுள்!

— கி. ஆ. சுப்புராசு —

தென்றலும் வாழ்த்துப் பாட
தெண்ணிலாக் கதிர்கள் வீச
அன்றலர் அல்லிப் பூவும்
அரும்பியே நகைமு கிழ்க்க
மன்றலே வேண்டி அந்த
மங்கைமா னருகி லெய்த
என்றனின் இளமை நெஞ்சில்
இருளுமே திரைவி ரிக்கும்

தேன்மலர்த் தோற்றங் காட்டி
தீந்தமிழ்ச் சுவையை ஊட்டி
வான்திகழ் உடுக்கள் ஊடே
வளர்பிறை மதியை ஒத்தாள்
தோன்றியே மறைந்தாள் அந்தோ
தோகையை எங்குக் காண்பேன்.
ஆன்றவென் இளமை நெஞ்சில்
அழியிருள் திரை விரிக்கும்

பண்ணினுக் கினிமை யானுள்
பழத்திற்குச் சுவையு மானுள்
கண்ணினுக் கொளியு மானுள்
கருத்திற்கு விருந்து மானுள்
எண்ணிடற் கிலக்கு மானுள்
எழில்தனக் கேற்ற மானுள்
கண்ணுக்குப் பொருத்த மானுள்
காதலி யானு ளன்றே!

-: காதல் :-

அவள்:

என் உதட்டைக் கடித்தது வண்டென்று எண்ணினேன். நீங்கள்தாமா? அட!

அவன்:

பசிக்குக் கிடைத்தது பலாச்சுளை என்று எண்ணினேன், உன் உதடுதான? அட!

இது செய்தி...

புதுவை மாநிலப் பிரதம கமிஷனர் திரு. எம்· கே. கிருபாளானி இங்கு ஒரு புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்தார்

மேற்படி கண்காட்சி பிரெஞ்சுப் பிரதிநிதி சபை சார்பிலும் அலியான்சு பிரான்சீசு சார்பிலும் நடத்தப்பட்டது

பிரான்சின் தற்காலச் சிற்பவேலைகள் சர்க்கார் மாளிகைகள் மாதாக்கோவில்கள், வீடுகள், பள்ளிக் கட்டடங்கள் முதலானவை பற்றிய 46 புகைப்படங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

★ ★ ★

தமிழ் நாட்டிலிருந்து கேரளா அரிசி வாங்கிச் செல்வதுபற்றிக் கேரள சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில் "தனிப்பட்ட வியாபாரிகள் தஞ்சை அரிசியை வாங்கிவருவதற்குத் தடையெதுவும் கிடையாது. அரசாங்கம் வாங்குவது அவசியம் என்று கருதப்பட்டால் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் அதுபற்றி விவாதிக்கப்படும்" என்று கேரள முதல் மந்திரி கூறியிருக்கிறார்.

★ ★ ★

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் புதிதாகக் கட்டப்பட்ட நகரசபை ஆரம்பப்பள்ளியைத் திறந்து வைத்த கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் நடப்பு ஆண்டில் ஏறக்குறைய ஐந்துலட்சம் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு தருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார்.

கடந்த ஆண்டில் 2 லட்சத்து 28 ஆயிரம் ஏழைப் பிள்ளைகட்கு இலவசப் பகல் உணவு கொடுக்கப்பட்டதாம்.

★ ★ ★

பரப்பிக்குளம் நீர்த் தகராறைப் பஞ்சாயத்துக்கு விடுவது என்ற கேரளாவின் வாதத்துக்குச் சென்னை விளக்கம் தந்திருக்கிறது.

பரப்பிக்குளம் நீரைப் பகிர்ந்து கொள்வதுபற்றி கேரளாவுக்கும் சென்னைக்கும் ஏற்பட்டுள்ள தகராறைப் பஞ்சாயத்துக்கு விடுவதுபற்றி சென்னை சர்க்காருக்கு எவ்வித ஆட்சேபமுமில்லை.

இந்தத் தகராறைத் தீர்த்துவைக்க டெல்லியின் முடிவை நாங்களும் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

இவ்வாறு முதன்மந்திரி காமராசர் நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

★ ★ ★

புதுச்சேரி முதல் மந்திரியாயிருந்து அண்மையில் பதவியிழந்த திரு. குபேர் மந்திரிசபை அமைப்பைக்குறித்துப் பேசுவதற்காக டெல்லிக்குப் போயிருக்கிறார்.

★ ★ ★

இலங்கையில் 100க்கு 68 வீதம் சிங்களவர் வசிப்பதனால் சிங்கள மொழியே ஆட்சி மொழியாக இருக்கும் அதனோடு சம இடத்தைத் தமிழ் மொழிக்குக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் குழப்பம் உண்டாகும்.

–இவ்வாறு இலங்கைச் சட்டசபையில் பிரதமர் பண்டாரநாயகா பேசியிருக்கிறார்·

அரசாங்கவேலைகளில் நியாயமான அளவுக்குத் தமிழ்மொழியை உபயோகிப்பாராம்.

அண்மையில் நடந்த பெருங்கலவரத்தின் காரணமாக சிறைப்படுத்தப் பட்டிருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பத்துப்பேரையும் விடுதலை செய்தால் மீண்டும் பயங்கர கலகம் வருமாம்.

★ ★ ★

அங்கேரிப் பிரதமர் திரு, நாகியையும் அவரது துணைவர்களையும் கொலைசெய்த கம்யூனிச ஆட்சி அவரது நெருங்கிய நண்பர்கள் சிலரையும் மறைமுகமாக விசாரணைசெய்கிறதாம்.

★ ★ ★

சேரிகளில் வாழும் மக்களுக்கு ஆத்மீக நலன்கள் கிடைக்கவேண்டுமாம்!

கோயில் இல்லாத சேரிகளில் சிறு கோயில் ஒன்றைக் கட்டப் பெரிய கோயில்களின் உபரி வருமானத்திலிருந்து பொருள் உதவிசெய்வதையும் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நிறைவேற்ற வேண்டிய திட்டங்களோடு ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமாம்.

புதிதாகக் கட்டப்படும் கோயிலில் பூசை செய்யச் சேரி வாசிகளில் ஒருவருக்குப் பயிற்சியளிக்க வேண்டுமாம். இப்படிக்கு இந்து தர்மப் பிரசார சங்கமாம்!

★ ★ ★

தலைமலை கண்ட தேவர்...

காட்சி ச.

இடம்: ஷியூர் தேவடியாள் வீடு

காலம்: இரவு

உறுப்பினர்: தேவடியாள், பாவலர்

காட்சித் தலைப்பு :

பார்ப்பானைப் பாரா என் கண்.

நிகழ்ச்சி : தேவடியாள் சிவபூசை முடித்துத் திருப்பூவணநாதர்மேல் பாடத் தொடங்கினாள்.

(வெண்பா)

திருப்பூ வணநாதா தேவர் அடியார்
கருப்பூ வணந்தந்த கன்னி - கருத்தில் உன்தாள்
சேர்ப்பாரைப் பார்ப்பேன் சிவம்பார்ப்பேன்...

நின்றுவிடுகின்றது வெண்பா. முடிக்கச் சொல் தேடுகின்றாள். அதே நேரம் கட்டிலின் கிழிருந்து ஒருகுரல் :

...ஊர்திருடும்
பார்ப்பானைப் பாராஎன் கண்.

என வெண்பாவை முடிக்கக் கேட்ட தேவடியாள் உவப்பால் துள்ளுகின்றாள்.

தேவடியாள் :- (கட்டிலின் கீழுள்ள பாவலரைத் தொட்டிழுத்து) இப்படி ஒரு பாவலர் இருந்தாரா? நீவீர் கட்டிலின்கீழ்க் கவிழ்ந்துபடுத்துப் பதுங்கியது எதற்கு ?

பாவலர் : (குறள் வெண்பா)

பொருள்வேண்டு மென்றுரைத்தா ரூர்ப்பொது வாளர்
திருடத்தான் சேர்ந்திருந்தேன் இங்கு.

தேவடியாள் : திருடவில்லையே!

பாவலர்: (குறள் வெண்பா)

அரிதில் அரிது திருடல் அதுவும்
தெரிதற் கரிதாய ஒன்று.

தேவடியாள் : ஊர்ப்பொதுவாளர் பொருள் கேட்டார். பெரும்பொருள் தருகின்றேன் அவரிடம் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்து விடுங்கள் என் காதல் நோய்க்கு மருந்து தந்துவிடுங்கள்.

ஐயரின் கருத்தாம்..?

"ஏதாவதொரு சமயத்தில் எல்லா அலுவல்களுக்கும் இந்தி நாட்டின் பொது மொழியாக வேண்டும், எனவே சட்டங்கள் இந்தியில் இயற்றப்படுவதுடன் நீதிமன்ற நடைமுறைகளுக்கும் இந்தி மேற்கொள்ளப் படவேண்டும்."

சுப்ரீம் கோர்ட் நீதிபதி டி. எல். வெங்கடராம ஐயர் கோயம்புத்தூரில் நிருபர்களிடையே பேசுகையில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

முன்னேற்றம்..?

கேரளாவில் கிரிமினல் வழக்குகளின் எண்ணிக்கை மிகுதியாகி யிருக்கிறதென்ற தகவலை மந்திரி வெளியிட்டிருக்கிறார்.

1956 – 57 ல் மொத்தம் 13,950 வழக்குகள் பதிவாயினவாம் அவை 1957 – 58 ல் 16,750 ஆக உயர்ந்திருக்கின்றன.

கொலை வழக்குகள் 195 லிருந்து 250 ஆக உயர்ந்து விட்டதாம்.

அங்கும் புகைகிறது!

வங்காளிகளுக்குத் தனியுரிமை நாடு வேண்டும், சுதந்திர வங்காளம் வேண்டும் என்று வங்காள சட்டசபையில் மெம்பர் ஒருவர் பேசியிருக்கிறார் அதற்கு அவர் கூறும் காரணம் "வங்காளத்தில் அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்ற டெல்லி மறுக்கிறது" என்பதே.

பாக்கிஸ்தான் பிரிக்கப்பட்டபோதே கோரப்பட்ட அக்கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துவோம் என்று மேலும் அவர் கூறியிருக்கிறார்.

கம்யூனிஸ்டு மெம்பரும் பிரஜா சோசலிஸ்டு மெம்பரும் இதை எதிர்த்தார்களாம்.

பாவலர்: (வெண்பா)

அமிழ்துக்கும் கண்டுக்கும் தேனுக்கும் மேலாம்
தமிழுக்குத் தொண்டுசெய்வோம் வாடி! – தமிழ்த்தாய்
ஆரியத்தால் சாகையிலே காதலொன்று! ஆருயிராம்
காரியத்தில் கண்ணு பிரு!

தேவடியாள் : தமிழுக்குத் தொண்டு செய்வோம்!

(பாவலர் பெரும் பொருளோடு செல்கின்றார்)

பல்லே சொல்லின் வித்து

சி த் த ன்

ஆரப்பா, நான்சொல்லும் செய்தி கேட்பாய்:
அரியஉடல் பெற்றவனே மனிதன் என்பான்!
வேரப்பா பல், உடலின் உறுப்பிற் கெல்லாம்;
விளையாட்டாய் எண்ணுதே; அதனைக் காப்பாய்!
சீரப்பா அதுமுகத்துக்(கு); ஆணி வேராம்
சிரிப்பிற்கும்; சொல்லுக்கும் பல்லே வித்தாம்!
பாரப்பா, "முத்துக்கள்—முல்லை" என்றே
பலகவிஞர் அதன்சீரைப் பாடி வைத்தார்!

மென்றுண்பான் நன்றிங்கு வாழ்வான் என்றே
மேலோர்கள் கூறியசொல் மறைச்சொல் லப்பா!
இன்றைக்கும் பல்லுறுதி உடையான், வாழ்வின்
இன்பத்தைத் துய்க்கின்றன்; பற்கள் இல்லான்
வென்றுயர்தா மரையில்லாப் பொய்கை
[யொப்பான்!
வேலொடிந்து தோளொடிந்த வீரன் ஒப்பான்!
நன்றியங்கா தவன்குடர், கல் லீரல், சோர்ந்து
நலிந்துவிடும்; பிணிபலவாம்; ஆயுள் தேயும்!

பல்லொன்றை இழப்பாயேல் ஏனைப் பற்கள்
படிப்படியாய் நாளடைவில் தொலைந்து போகும்!
"பல்காப்பாய் – அதுகாக்கும் உன்னை" என்ற
பழமொழியொன் றுங்கிலத்திற் பாரா யப்பா!
பல்விழந்தான், இருபதிலே அறுப தாண்டின்
பாட்டன்போல் உருமாறப் பலருங் காண்பார்!
பல்விட்டான், அறுசுவையின் பயனை விட்டான்!
பலருடனே நகைத்துவக்கும் பண்பை விட்டான்!

பால்பருகில் பல்வளரும்; முட்டை யுண்க!
பழம், காய், மோர், சுண்ணும்புச் சத்துண் ணப்பா
வேல், ≠பூல், ஆல், வேம்பால் பல்விளக்கல்
[நன்றும்!
வெண்சாம்பல், கரி, மண், கல், பாலை யாகா;
பால்பெறினும் சூடாகா(து); ≐எயிறு தேய்க்கப்
பழகப்பா; உண்டதன்பின் பல்தூய் மைசெய்!
பால்முறுவல், உடலுறுதி இரண்டும் எய்தப்
படியிவையாம்; நடைமுறையிற் பயன் காணப்பா!

—○—

≠ பூல்=பூலா என்னும் செடியின் கொம்பு.

≐ எயிறு= பல்லின் மேலிடத்துச் சதை. (gum)

தென்பாங்குக்காரி

— ★ —

நாலடுக்கு மல்லிகையாம்
நாரெடுத்துப் பூத்தொடுக்கும்
சேலடுக்கும் கண்ணுளே
திரும்பாதோ உன்முகந்தான் செங்கேணி!
அடியே செங்கேணி!
இரும்போடி உன்மனந்தான் செங்கேணி!

மேலடுக்கு மாடியிலே,
நம்நாடு தாழையிலே
காலடுக்கு வெற்றிலையா
கையடுக்குச் சீட்டாட்டமா கங்காணி!
போடாபோ கங்காணி!
சொல்லடுக்கி நாட்டைவிற்கும் கங்காணி!

அஞ்சுவிரல் மோதிரமாம்
அங்கைமேல் பச்சைக்கிளி
கொஞ்சுகின்ற நேரத்திலும்
கொஞ்சமும் நீ கொஞ்சாததேன் செங்கேணி?
அடியே செங்கேணி!
நெஞ்சந்தான் செங்கல்லோ செங்கேணி!

பஞ்சணையில் அரசியலோ
சாதிநம்மைப் பழிக்கையிலே!
தஞ்சமென்ன பார்ப்பானிடம்
தமிழர்களை விலைக்குவிற்கும் கங்காணி!
போடாபோ கங்காணி!
தண்டாதே சட்டிச்சோறு கங்காணி!

வண்டுக்குக் கும்மாளமாம்
வாயுதடு தேனூற்றும்
கண்டுங்கா ணுததுபோல்
காட்டுகின்றய் நீட்டாண்மை செங்கேணி!
அடியே செங்கேணி!
கற்றதெல்லாம் என்னிடமா செங்கேணி!

தொண்டுக்கு முட்டுக்கட்டை
துட்டுக்குச் சிட்டானுய்
வெண்தாடி வேந்தன்நாட்டு
விடுதலைக்கு மறுதலையா கங்காணி?
போடாபோ கங்காணி!
கெடுதலைக்குப் பாடுபட்டாய் கங்காணி!

செய்தி

தமிழ்நாட்டில் நடைபெறும் முக்கிய இயக்கச் செய்திகளைச் சுருக்கமாக எழுதியனுப்புக.

செய்திகளை அஞ்சலட்டையில் மட்டுமே எழுதியனுப்பவேண்டும்.

★

நினைவுறுத்துகிறோம்!

குயிலில் பிறரால் எழுதப் படும் பாட்டு உரைநடைகட்கு அவரின் இயற்பெயர் அல்லது புனைபெயர் இருக்கும். ஆசிரியரால் எழுதப் படுவனவற்றிற்குப் புனை பெயரோ இயற் பெயரோ இரா.

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

—★▭★—

எழுத்தாளர்க்கு...

தமிழ், தமிழர், தமிழ்நாடு முன்னேற்றம் பற்றிய சீரிய கருத்துக்களைக் கொண்ட எளிய இனிய கதை கட்டுரைகளை நம் குயிலுக்கு எழுதுக.

எழுதுவனவற்றைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெறுதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சற்றலைகள் அனுப்ப வேண்டும்.

★ ★ ★

விற்பனையாளர்க்கு...

விற்பனை விண்ணப்ப விதிகளில் கண்டுள்ளபடி தேவையான இதழ்கட்குரிய முன்பண மின்றிக் "குயில்" இதழ்கள் அனுப்பப்பட மாட்டா.

கூடுதலான இதழ்கள் வேண்டுவோர் இதை நோக்கித் தேவையான இதழ்கட்குரிய முன்பணம் அனுப்புக.

விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தனுப்பா மலும், அனுப்பிப் பணமனுப்பாமலும் இருப் போர்க்கு இதழ்கள் அனுப்பப்படுவதில்லை.

"குயில்" இதழ்கள் நன்றாகப் பார்வை யிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாகமுடியாது.

குயிலகத்துக்கு அனுப்பும் தொகையைப் பணவிடை (M. O.) மூலம் மட்டுமே அனுப்பி அதன் இரசீதையும் அனுப்பவேண்டும்.

செக்முதலாயின ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

—★▭★—

அமைச்சர்:

குயிலகம், புதுச்சேரி.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.